MARKING SCHEME FOR

SAMPLE QUESTION PAPER -2023-2024 [ X STD – TAMIL006 ]

மதிப்பெண் வழங்கு முறை

மாதிரி வினாத்தாள் - 2023-2024

பத்தாம்வகுப்பு மொத்த மதிப்பெண்கள் : 80

X –STD maximum marks: 80

தமிழ் - TAMIL

பகுதி – அ (படித்தல் திறன்)

Unseen Passage-10 Marks

பலவுள்தெரிவு வினாக்களுக்கேற்ற விடைஇருப்பின் முழு மதிப்பெண் வழங்குக

1.அ.பின்வரும்பகுதியைப்படித்து,கொடுக்கப்பட்ட பலவுள்தெரிவு வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. 5x1=5

I.இ) தொண்டு

II.இ) மன்பதை

III.ஆ) "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன்

IV.இ) மெழுகுவர்த்தி சந்தனம்

V. ஆ) அவை

2. பின்வரும் பகுதியைப் படித்து,கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.

5x1=5

I.பதின்மூன்றாம் நூற்றாண்டு மக்கள் மிளகைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்?

II.பதப்படுத்தும் முறையினால் மிளகு நான்கு வகைப்படும் .அவை கருமிளகு.வெண்மிளகு, பச்சை மிளகு, சிவப்பு மிளகு

III.மிளகைக் குறிக்க, தமிழில் மிளகு.இலவேசம் கறி ஆகிய சொற்கள் உள்ளன.

IV.மாவீரன் அலெக்ஸாண்டர் . மிளகு என்பதை Pippali என்ற வார்த்தை கொண்டு தவறாகக் குறிப்பிட்டுவிட்டார்

V.பழந்தமிழர் சமைக்கும்போது அதில் அதிகமாக மிளகினைப் பயன்படுத்தினார்கள் .அதனால் கறி என்ற சொல் இறைச்சியைக் குறிப்பதாகவும் மாறிவிட்டது

3.சான்றுதருக ( மூன்று மட்டும்) (3x1=3)

I.ஈ. இசைத்தாய்

II.அ. வானவில்

III.இ. மாவிலை

IV.ஈ) வாய்மையே வெல்லும்

1. V.ஆ.கெடுப்பதூஉம்

4.கோடிட்ட இடங்களை நிரப்புக: (மூன்று மட்டும் ) (3x1=3)

I.இ. எட்டு

II.இ.உம்மைத்தொகை

III.ஈ.மருதம், நெய்தல் பாலை

IV.ஆ.சுட்டு , மறை,நேர்

V. இ.வினையாலணையும் பெயர்

5.இலக்கணக் குறிப்பு எழுதுக. ( மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)

I. இ. உரிச்சொல் தொடர்

II. ஈ.மரபு வழுவமைதி

III.ஆ. மூன்றாம் வேற்றுமைத்தொகாநிலை

IV.ஆ.ஒற்றளபெடை

V.இ) உம்மைத்தொகை

6.கூறியவாறு செய்க ( மூன்று மட்டும்) (3x1=3)

I.ஆ.சுடுகின்ற மண்

II.ஆ.பால் குடித்தேன்

III.ஈ.எலிப்பொறி

IV. ஆ .உவர்க்கழி

V.ஆ. கொட்டு

7.. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக, (2x1=2).

I.இ) காண்ப

II.ஆ) மன்னவன்

8.பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள்தெரிவு செய். வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. [5x1= 5]

I.(ஆ) கம்பராமாயணம்

II. ஈ) கம்பர்

III. (ஈ) கும்பகர்ணன் வதைப்படலம்

IV. ஆ) காற்றாடி

V. ஆ) உலக்கையால் இடிப்பது போன்ற சந்தம்

9.பின்வரும் செய்யுள்வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை தருக (3x3=9)

பிழையற்ற முழுமையான விடைகளுக்கு முழு மதிப்பெண் வழங்குக

10..எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடையளி. ( 3x5=15 )

பிழையற்ற முழுமையான விடைகளுக்கு முழு மதிப்பெண் வழங்குக

11.பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக்

க ட்டுரை எழுது 1x10= 10

முன்னுரை- 1 மதிப்பெண்

துணைத் தலைப்புகளுடன் கூடிய பொருளுரை- 8 மதிப்பெண்

முடிவுரை – 1 மதிப்பெண்

12.பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற வரைக (3)

முப்பது சொற்களுக்குக் குறையாத வருணனையும்

( 5 தொடர்கள் ) தலைப்பும் இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக .

ஐந்து தொடர்கள்- 2½

தலைப்பு-½

13.ஏதேனும்ஒருகடிதம்எழுதுக 1x8=8

அலுவல் முறைக் கடிதம்

I.அனுப்புநர் - 1

II.பெறுநர் -1

III.விளி -½

IV.பொருள் -½

V.உள்ளடக்கம் -3

VI.முடிப்பு -½

VII.இடம்,தேதி ½

VIII.உறைமேல் முகவரி-1

2. நட்பு/உறவு முறைக் கடிதம்

I.இடம்,தேதி 1

II.விளி -½

III.நலம் கேட்டல்- -1

IV.உள்ளடக்கம் -3½

V.முடிப்பு -1

VI.உறைமேல் முகவரி-1

14.பின்வருவனவற்றுள் எதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக 1x6=6

தலைப்பு ½

முன்னுரை- ½

உட்தலைப்புடன் கூடிய பொருளுரை - 4

முடிவுரை - ½

மேற்கோள் . ½

தவறின்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்**குக.**

பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள்,2023-2024

X-STD SAMPLE QUESTION PAPER, 2023-2024

தமிழ் (TAMIL 006)

கால அளவு:3மணி மொத்த மதிப்பெண்கள்: 80

Time allowed : 3 Hrs Maximum Marks : 80

இவ்வினாத்தாளில் அச்சிடப்பட்ட 8 பக்கங்கள் உள்ளதைச் சரி பார்க்கவும்

இந்த வினாத்தாளில் 14 வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்

எழுதத் தொடங்குவதற்கு முன் வினாவரிசை எண்ணைக் குறிப்பிடவும்

Please check that this question paper contain 8 printed pages.

Please check that this question paper contain 14 parts of the question.

Please write down the serial number of the question before attempting it.

பகுதி – அ (படித்தல் திறன்) பத்து மதிப்பெண்கள்

## Unseen Passage-10 Marks

1.அ .பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.. (5x1=5)

ஒப்புரவு என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன? காலவோட்டத்தில் மொழியிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன .பழைய பொருள்களைக் குறிக்க புதிய சொற்கள் தோன்றுகின்றன.இக்காலத்தில் சட்டம், கூட்டம், சமுதாயம் என்னும் சொற்களால் குறிக்கப்படுவன முற்காலத்தில் முறையே ஆணை, அவை, மன்பதை என்னும் சொற்களால் குறிக்கப்பட்டன. அதுபோல இன்று தொண்டு என்று நாம் வழங்கும் சொல்லைத் திருவள்ளுவர் காலத்தில் ஒப்புரவு என்று குறித்துள்ளனர் .தொண்டு என்ற சொல் தன்னலம் கருதாப் பணி என்ற பொருளில் முற்காலத்தில் வழங்கப்படவில்லை .ஒப்புரவு என்பதற்குப் பயன்கருதாத உதவி; மற்றவர்க்கு விரும்பிச் செய்யும் தொண்டு என்பது பொருள்

ஒப்புரவாளன் பிறர்க்கு உதவுபவன் உலகத்திற்கு உதவுபவன்'. சுருங்கச் சொன்னால் ஊருக்கு உழைப்பவன் ஒப்புரவாளன்.

அவனுக்கு மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகும். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" என்பது தாயுமானவர் வாக்கு". எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க" என்பது வள்ளலார் விருப்பம்."என்கடன் பணிசெய்து கிடப்பதே'

என்பதே நாவுக்கரசரின் நன்மொழி .ஒப்புரவாளன் வாழ்க்கைக் குறிக்கோள் இப்படித்தான் அமையும்
ஒப்புரவாளன் பிறர்க்கு ஒளிநல்கத் தன்னையே அழித்துக் கொள்ளும் மெழுகுவர்த்தி; பிறரை வாழ்விக்கத் தன்னையே தேய்த்துக்கொள்ளும் சந்தனக்கட்டை.

வினாக்கள்:

I.ஒப்புரவு என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன?

அ ) நல்லுறவு ஆ) நற்செயல் இ) தொண்டு
ஈ) ஒன்றுபட்டு வாழல்

II.இக்காலத்தில் சமுதாயம் என்னும் சொல்லால் குறிக்கப்படுவது முற்காலத்தில்__________ எனப்பட்டது.

அ) ஆணை ஆ)அவை இ) மன்பதை ஈ)குமுகாயம்

III.தாயுமானவர் வாக்கு யாது?

அ) மக்கள் தொண்டே மகேசன் தொண்டு
ஆ) "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன்
இ) ."என்கடன் பணிசெய்து கிடப்பதே'
ஈ) ." எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க"

IV.ஒப்புரவாளனுக்குக் கூறப்பட்ட உவமைகள் யாவை?

அ) மெழுகுவர்த்தி ஆ) சந்தனம் இ) மெழுகுவர்த்தி சந்தனம்

ஈ) கரிக்கட்டை

V.கூட்டம் என்பதைக் குறிக்க வழங்கப்பட்ட பழஞ்சொல் யாது?

அ) ஆணை ஆ) அவை இ) மன்பதை ஈ)குமுகாயம்

2.<u>பின்வரும் பகுதியைப் படித்து,கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக</u>. (5x1=5)

நீங்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டில் பிறந்திருந்தால், அதுவும் ஐரோப்பிய நாடுகளில் பிறந்து, கைவசம் சில மூட்டைகள் மிளகு சொத்தாக இருந்திருந்தால், உலகின் பணக்காரரர் வரிசையில் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்திருப்பீர்கள் .

ஆம் மிளகின்றி அமையாது உலகு என்பதே வரலாறு வழங்கும் செய்தி. பூமி சூரியனைச் சுற்றி வந்தது .பூமியில் உள்ளவர்கள் மிளகைச் சுற்றிச் சுற்றி வந்தனர் உலகின் ஏழு கடல்களிலும் மிளகைத் தேடிய பயணங்கள் நீண்டன. மிளகு,வால்மிளகு என்பன இதன் இரு வகைகள் .பதப்படுத்தும் முறையைக் கொண்டு அதனைக் கருமிளகு.வெண்மிளகு, பச்சை மிளகு, சிவப்பு மிளகு என்று பிரிக்கிறார்கள்.

இதன் காய் பச்சை நிறத்தில் இருக்கும் .பழுத்தால் சிவப்பாக மாறும் .காய்ந்தால் கருப்பாக மாறும்.மிளகைக் குறிக்க, தமிழில் மிளகு.இலவேசம் கறி ஆகிய சொற்கள் உள்ளன. பழந்தமிழர் சமைக்கும்போது அதில் அதிகமாக மிளகினைப் பயன்படுத்தினார்கள் .அதனால் கறி என்ற சொல் இறைச்சியைக் குறிப்பதாகவும் மாறிவிட்டது .Pepper என்ற சொல்லுக்கு மூலமான தமிழ் வார்த்தை பிப்பிலி .

தமிழில் பிப்பிலி என்பது மிளகைக் குறிப்பதல்ல .திப்பிலியைக் குறிப்பதே ஆகும் மாவீரன் அலெக்ஸாண்டர் இந்தியாவுக்குப் படையெடுத்துவிட்டுத் திரும்பும்போது மிளகை அள்ளிக் கொண்டு சென்றார் .அப்போது மிளகு என்பதை Pippali என்ற வார்த்தை கொண்டு தவறாகக் குறிப்பிட்டுவிட்டார்.

மிளகும் திப்பிலியும் ஒரே கொடியில் மலரும் இரு பொருள்கள் என்று தவறாகப் புரிந்து கொண்டார்கள். பிற்காலத்தில் ஐரோப்பியர்கள், மிளகில் இருந்து திப்பிலியை வேறுபடுத்திக் காட்ட அதை Long Pepper என்று அழைக்க ஆரம்பித்தார்கள்.

<u>வினாக்கள்:</u>

I.பதின்மூன்றாம் நூற்றாண்டு மக்கள் எதைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்?

II.பதப்படுத்தும் முறையினால் மிளகு எத்தனை வகைப்படும்?அவை யாவை?

III.மிளகைக் குறிக்க, தமிழில் வழங்கும் சொற்கள் யாவை?

IV.அலெக்ஸாண்டர் செய்த தவறு யாது?

V.'கறி' என்ற சொல் இறைச்சியைக் குறிப்பதாக மாறியது எப்படி?

## பகுதி – ஆ (இலக்கணப்பகுதி) 12 மதிப்பெண்கள்

## Grammar-12 Marks

3.<u>சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)</u> (3x1=3)

I.பொதுமொழி

அ.படித்தான் ஆ. அறம் வெல்க இ. கை ஈ. இசைத்தாய்

II.உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

அ. வானவில் ஆ.குறள் படி இ.மாதவி மகள் ஈ.மலை ஏறினான்

III.மரபு வழாநிலை

அ. தென்னஞ்செடி ஆ. தென்னை இலை இ. மாவிலை ஈ. கரும்பு ஓலை

IV.இடைச்சொல் தொடர்

அ) சென்ற கோதை ஆ) நல்ல மாணவன்

இ) படித்தான் பாரி ஈ) வாய்மையே வெல்லும்

V.இன்னிசை அளபெடை

அ. உரனசைஇ ஆ.கெடுப்பதூஉம் இ.ஆஅளிய ஈ. உடுப்பதும்

4.<u>கோடிட்ட இடங்களை நிரப்புக: (மூன்று மட்டும் )</u> (3x1=3)

I.பொருள்கோள் ______________வகைப்படும்.
அ. ஆறு ஆ. ஏழு இ. எட்டு ஈ.ஒன்பது

II.இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் இடைச்சொல் மறைந்துவரும் தொகை ______________
அ) வேற்றுமைத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

III.இளவேனில் காலத்தைப் பொழுதாக உடைய திணைகள்
அ) குறிஞ்சி,முல்லை,மருதம் ஆ) முல்லை, மருதம்,நெய்தல்
இ)மருதம் ,நெய்தல்,குறிஞ்சி ஈ)மருதம், நெய்தல் பாலை

IV.வெளிப்படை விடைகள் .......................... ஆகிய மூன்றும்ஆகும்.
அ ) சுட்டு ,ஏவல், மறை ஆ) சுட்டு , மறை,நேர்
இ) சுட்டு , மறை,இனமொழி ஈ) சுட்டு , வினா ,நேர்

V.வினையைக் குறிக்காமல் வினை செய்தவனைக் குறிப்பது __________

அ. தொழிற்பெயர் ஆ.பண்புப்பெயர்

இ.வினையாலணையும் பெயர் ஈ.படர்க்கைப் பெயர்

5.<u>இலக்கணக் குறிப்பு எழுதுக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)</u> (3x1=3)

I.நனிநல்லர்
அ.இடைச்சொல் தொடர் ஆ. இடைத் தொடர்
இ. உரிச்சொல் தொடர் ஈ. எழுவாய்த் தொடர்

II.சோறும் கறியும் தின்றான்
அ. மரபு வழு ஆ. திணை வழு இ. காலவழு ஈ.மரபு வழுவமைதி

III.சாணம் மெழுகினாள்
அ. இரண்டாம் வேற்றுமைத்தொகை
ஆ. மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலை
இ. இரண்டாம் வேற்றுமைத்தொகாநிலை
ஈ). மூன்றாம் வேற்றுமைத்தொகை

IV.எஃஃகிலங்கிய

அ. மெய்யளபெடை ஆ.ஒற்றளபெடை

இ உயிரளபெடை ஈ. ஆய்தக்குறுக்கம்

V.நேற்று இன்று நாளை

அ) வேற்றுமைத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) உம்மை விரி

<u>6..கூறியவாறு செய்க (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)</u> (3x1=3)

I.சுடு மண் (பெயரெச்சத் தொடராக்குக)

அ.மண் சுடும் ஆ.சுடுகின்ற மண் இ. சூடுகின்ற மண் ஈ.மண் சுடுமா?

II.உணவு உண்டாயா? (இக்கேள்விக்கு இனமொழி விடை எழுதுக)

அ. வயிறு வலிக்கும் ஆ.பால் குடித்தேன்

இ.உண்ணவில்லை ஈ. வயிறு வலித்தது

III.எலியைப் பிடிக்கும் பொறி ( உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையாக்குக )

அ. எலியது பொறி ஆ. எலியினது பொறி

இ. எலிக்குப் பொறி ஈ.எலிப்பொறி

IV.அருவி நீர் (நெய்தலுக்கு உரிய நீர்நிலை ஆக்குக )

அ. பொய்கை ஆ .உவர்க்கழி இ.காட்டாறு ஈ. சுனைநீர்

V.கொள்ளை உண் (பொதுமொழி ஆக்குக)

அ. கொள் ஆ. கொட்டு இ. கொள் உண் ஈ.கொள் து

பகுதி – இ -(இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

## Main course book-31 Marks

<u>7..பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக</u>

(2X1=2)

I.எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் ............ தறிவு

(அ) அறிவ (ஆ) உணர்வ இ) காண்ப (ஈ)தெரிவ

II.நாள்தோறும் நாடி முறைசெய்யா ___________

. நாள்தோறும் நாடு கெடும்

(அ) வேந்தன் (ஆ) மன்னவன் இ) அரசன் (ஈ) மக்கள்

8..பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள்தெரிவு செய். வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. [5x1= 5]

"உறங்கு கின்ற கும்ப கன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்று காணெ ழுந்தி ராயெ ழுந்திராய்
கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்"

வினாக்கள்

I.இச்செய்யுள் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
(அ) தேம் பாவணி (ஆ) கம்பராமாயணம்
(இ) சீவகசிந்தாமணி (ஈ) திருவாசகம்

II.இந்நூலின் ஆசிரியர் யார்?
(அ) உமறுப்புலவர்( ஆ) சேக்கிழார் (இ) வீரமாமுனிவர் (ஈ) கம்பர்

III.இச்செய்யுள் இடம் பெற்றுள்ள படலத்தின் பெயர் என்ன?
(அ) நாட்டுப்படலம் (ஆ) ஆற்றுப்படலம்
(இ) கங்கைப்படலம் (ஈ) கும்பகர்ணன் வதைப்படலம்

IV.கறங்கு என்ற சொல்லின் பொருள் என்ன?

(அ) எமன் (ஆ) காற்றாடி (இ) வில் ( ஈ) அம்பு

V.இச்செய்யுளில் அமைந்த சந்தம் எதைப்போன்று உள்ளது ?

அ) கடப்பாரையால் இடிப்பது போன்ற சந்தம்

ஆ) உலக்கையால் இடிப்பது போன்ற சந்தம்

இ) அம்மியில் அரைப்பது போன்ற சந்தம்

ஈ) சிங்கம் முழங்குவது போன்ற சந்தம்

9..பின்வரும் செய்யுள்வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை தருக (3x3=9)

I.தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?.

II.முல்லைப்பாட்டு காட்டும் கார்காலச் செய்திகளை விவரி

III.திருவித்துவக்கோட்டு அம்மானை குலசேகரர் வாழ்த்துவது எப்படி?

IV.பூத்தொடுத்தல் என்னும் நவீன கவிதையில் உள்ள நயத்தை விவரி.

V.முயற்சியின் சிறப்பு குறித்து திருக்குறள் மொழிவன யாவை?

10.எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடையளி (3 x 5= 15)

I.காற்று எவ்வாறெல்லாம் ஆற்றலாகத் திகழ்கிறது

II.வறுமையிலும் விருந்தோம்பினர் தமிழர்- விளக்குக.

III.மெய்நிகர் உதவியாளர் குறித்து விவரி

IV.தமிழ்மொழி பொருள்வளம் உடையது என்பதை விளக்குக

V.இலக்கிய இறக்குமதி குறித்து விவரி

பகுதி – ஈ(துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்

Section –D Non-detail-10 Marks

11..பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுது
1x10=10

I.புயலிலே ஒரு தோணி

II.புதிய நம்பிக்கை

III.பாய்ச்சல் சிறுகதைச் சுருக்கம்

பகுதி – உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்

Section -E Creative Writing-17 Marks

12.. அ.கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (3)



..ஆ.பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.(3)

I.எருது புண் காக்கை அறியுமா ?

II.ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

13..கடிதம் எழுதுக (1x8=8)

I.இருப்பிடச் சான்றிதழ் வேண்டி வட்டாட்சியர்க்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக

அல்லது

II.நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளும் முறை குறித்து அயலூர் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

[இரண்டு கடிதங்களிலும் உன் முகவரி: அ,.அறவாழி /அ.நன்முல்லை
10. சுடர் குடியிருப்பு , அண்ணாநகர் மேற்கு , சென்னை-600040
எனக்கொள்க]

14..ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. ( 1X6=6)

I.முன்னுரை – தகவல் ஊடகங்கள் –ஊடக வகைகள் – செய்தித்தாள் வானொலி,தொலைக்காட்சி ,சமூக வலைத்தளங்கள் — ஊடகத்தால் ஏற்படும் நன்மைகள் – எதிர்மறை விளைவுகள்- முடிவுரை.

II.முன்னுரை – முன்தோன்றி மூத்த தமிழ் – இலக்கிய வளம்- இலக்கணச்சிறப்பு- பழமையும் புதுமையும் – அறிவியல் தமிழ் இணையத் தமிழ் -முடிவுரை.

III.முன்னுரை – வரதட்சணை என்னும் தீய நடைமுறை – பெண்களுக்கான அநீதி – அரசாங்கத்தின் முயற்சி- பெண்கள் அடையும் துயர் – சமநீதி காண்போம் - மகிழ்வான வாழ்வு – முடிவுரை.